Reg. No. | | | | | | |

# கிரீன் கார்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பெருந்துறை R.S

## மாதிரி வினாத்தாள் - I

வகுப்பு : X  மதிப்பெண்கள் : 100

## தமிழ்

நேரம் : 3.00 மணி

**குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.**

**பகுதி - I**

**பிரிவு - I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :** 15 x 1 = 15

1) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2) இனிய வாசனையுடன் வா என்று பாரதி அழைத்தது யாரை?

அ) காற்று ஆ) மேகம் இ) குழந்தை ஈ) அருவி

3) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

4) "எழுது என்றான்" என்பதை அடுக்குத்தொடர் இடம்பெறுமாறு மாற்றுக.

அ) எழுதி வா என்றான் ஆ) எழுது எழுது என்றான்

இ) எழுதி விரைந்து வா என்றான் ஈ) எழுதிச்செல் என்றான்

5) "உனதருளே பார்ப்பன் அடியேனே" - யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

6) இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் __________ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ______

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

7) குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

9) மேன்மை தரும் அறம் என்பது

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

10) கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

11) **'சரிந்தன அசும்பில் செல்லும்'** - இதில் அசும்பு என்பதன் பொருள் என்ன?

அ) நிலம் ஆ) மலை இ) காடு ஈ) மேகம்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு(12,13,14,15) விடை தருக.**

**நும்இல் போல நில்லாது புக்கு**
**கிழவிர் போலக் கேளாது கெழீஇ**
**சேட் புலம்பு அகல இனிய கூறி**
**பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு**
**குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்**

12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலின் பெயர்__________

அ) பரிபாடல் ஆ) முல்லைப்பாட்டு இ) மலைபடுகடாம் ஈ) புறநானூறு

13) 'இறடி' - இச்சொல்லுக்குரிய பொருள்__________

அ) சோறு ஆ) தினை இ) இறைச்சி ஈ) அரிசி

14) மலைபடுகடாம் இவ்வாறும் அழைக்கப்படுகிறது__________

அ) பொருநராற்றுப்படை ஆ) சிறுபாணாற்றுப்படை

இ) கூத்தராற்றுப்படை ஈ) பெரும்பாணாற்றுப்படை

15) 'கெழீஇ' - இச்சொல்லில் உள்ள அளபெடை__________

அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை

இ) செய்யுளிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

GREEN GARDEN MATRIC HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**21 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **4 x 2 = 8**

16) "**உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**

**வடுக்காண் வற்றாகும் கீழ்** " - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

17) விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆ) தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது தமிழர் மரபாகக் கருதப்படுகிறது.

18) வசன கவிதை - குறிப்பு வரைக.

19) வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

20) மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

21) **'விடும்'** என முடியும் குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **5 x 2 = 10**

22) **சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

அ) இன்சொல் ஆ) கீரி பாம்பு.

23) **இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அ) சிலை - சீலை ஆ) விடு - வீடு

24) **உரைத்த** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25) **கலைச்சொல் தருக.**

**அ)** Ultraviolet rays **ஆ)** Space technology

26) அகராதியில் கண்டு பொருள் எழுதுக. **ஊண் - ஊன்**

27) **குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.(எதிர்மறையாக மாற்றுக)**

**அ)** மீளாத் துயர் **ஆ)** அருகில் அமர்க

28) **தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

ஆ) வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

GREEN GARDEN MATRIC HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 3 = 6**

29) புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது, இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30) படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்கலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.





31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாக திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளில் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழர் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்கள் அறிவதற்கு கற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

**அ) சிற்றூர் மக்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துக்காட்டுபவை எவை?**

**ஆ) எவற்றின் எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?**

**இ) நிகழ்கலைகள் மக்களுக்கு எதைக் கொடுத்து எதைப் போக்குகின்றன?**

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**<u>34</u> - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2 x 3 = 6**

32) "மாளாத காதல் நோயாளன் போல்"

என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக

33) எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34) அ) **அருளைப்பெருக்கி**....எனத் தொடங்கும்**"நீதிவெண்பா"** பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) **அன்னை மொழியே** .... எனத் தொடங்கும் **"அன்னை மொழியே"** பாடலை எழுதுக.

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 3 = 6**

35) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

36) **முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**

**இன்மை புகுத்தி விடும்.** -இக்குறட்பாவில் அமைந்த பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

37) **இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**

**கெடுப்பார் இலானும் கெடும்.** - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5 x 5 = 25**

38) **அ)** இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** காலக் கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

**கவிஞன் யானோர் காலக் கணிதம்**

**கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!**

**புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்**

**பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!**

**இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்**

**இவைதவறாயின் எதிர்ப்பதென் வேலை!**

**ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்**

**அவனும் யானுமே அறிந்தவை; அறிக!** **-கண்ணதாசன்**

39) **அ)** உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் **உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்** என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக .

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41) கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42) **அ) வானொலி அறிவிப்பு**

ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க**.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil Culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and world wide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளி.** **3 x 8 = 24**

43) **அ)** கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

**(அல்லது)**

**ஆ)** ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் "செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்" பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

44) **அ)** "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப்பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக**.**

45) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக**.

**அ)** முன்னுரை - இயற்கையோடு இயைந்து வாழ்வோம் - வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் - மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் - முடிவுரை.

**(அல்லது)**

**ஆ)** நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – விடுதலை வேள்விகள் – நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – ஆகிய குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. இக்கட்டுரைக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

❀ ✿ ❀

| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | அ | அ | ஆ | ஆ | ஈ | இ | அ |
| **9.** | **10.** | **11.** | **12.** | **13.** | **14.** | **15.** | |
| அ | ஆ | அ | இ | ஆ | இ | ஈ | |

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

*Reg. No.* | | | | | | |

# கிரீன் கார்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பெருந்துறை R.S

## மாதிரி வினாத்தாள் - II

**வகுப்பு : X** **மதிப்பெண்கள் : 100**

## தமிழ்

**நேரம் : 3.00 மணி**

**குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.**

**பகுதி - I**

**பிரிவு - I**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :** **15 x 1 = 15**

1. **<u>'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்'</u>** நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.

அ) இலையும், சருகும் ஆ) சருகும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) தோகையும் சண்டும்

2. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) கொண்டல் - 1. மேற்கு

ஆ) கோடை - 2. தெற்கு

இ) வாடை - 3. கிழக்கு

ஈ) தென்றல் - 4. வடக்கு

அ) 1,2,3,4 ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 3,4,1,2

3. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்று பாடியவர் யார்? எந்த நூல்?

அ) பாரதியார், முரசு ஆ) மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

இ) ஔவையார், கொன்றைவேந்தன் ஈ) சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

4. **"பாடினாள் கண்ணகி"** - எவ்வகைத்தொடர்?

அ) வினையெச்சத் தொடர் ஆ) விளித்தொடர்

இ) வினைமுற்றுத்தொடர் ஈ) வேற்றுமைத்தொடர்

5. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே

அ) பெப்பர் ஆ) இலா இ) ரோபோ ஈ) வாட்சன்

6. அருந்துணை என்பதைப் பிரித்தால் _______

அ) அருமை + துணை ஆ) அரு + துணை

இ) அருமை + இணை ஈ) அரு + இணை

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL,PERUNDURAI R.S.

7. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்

ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

8. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப்போரிடுவதன் காரணம்

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) நிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

9. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும்

பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்

இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

10. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

11. திருமுழுக்கு யோவான், கருணையன் இவ்வாறு அழைக்கப்படுகிறார்

அ) சூசையப்பன் ஆ) பேதுரு இ) வளன் ஈ) அருளப்பன்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.(12, 13, 14, 15)**

**"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,**
**பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,**
**கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி**
**பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"**

12. இப்பாடலின் ஆசிரியர்

அ) ஔவையார் ஆ) நப்பூதனார் இ) குமரகுருபரர் ஈ) பரஞ்சோதி முனிவர்

13. இப்பாடலடிகள் இடம்பெறும் நூல் எது?

அ) பரிபாடல் ஆ) காசிக்காண்டம் இ) முல்லைப்பாட்டு ஈ) மலைபடுகடாம்

14. நனந்தலை உலகம் இத்தொடரின் பொருள்?

அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம் இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

15. பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை---------

அ) தடக்கை ஆ) வளைஇ இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL PERUNDURAI R.S.

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**21 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **4 x 2 = 8**

16. **"மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**

**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"** - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள

காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

17. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.

**அ)** தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.

**ஆ)** ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

19. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

20. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

21. **'உலகு'** என்று முடியும் குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **5 x 2 = 10**

22. **கீழ்க்காணும் சொற்களில் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

(குவியல், குலை, மந்தை, கட்டு)

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | | புல் | |
| பழம் | | ஆடு | |

23. **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

**அ)** கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

**ஆ)** பொதுஅறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

24. **பொறித்த** பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. **கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.**

**அ)** மடு – மாடு **ஆ)** வளி - வாளி

26. **கலைச்சொல் தருக.**

**அ)** Belief **ஆ)** Homograph

27. **தொகைச்சொற்களைப் பிரித்து எழுதி தமிழ் எண்ணுரு தருக.**

**அ)** மூவேந்தர் **ஆ)** நாற்றிசை

28. **ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

**அ)** புதுக்கோட்டை **ஆ)** கோயம்புத்தூர் **இ)** புதுச்சேரி **ஈ)** நாகப்பட்டினம்

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 3 = 6**

29. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

30. மொழிபெயர்த்தல் என்ற தொடரை தொல்காப்பியர் மரபியலில் (98) குறிப்பிட்டுள்ளார். "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி வந்த இராமாயணம், மகாபாரதம் போன்ற தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளன. இதுவும் பிறமொழிக் கருத்துகளை, கதைகளைத் தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே.

    **அ) தொல்காப்பியர் மொழிபெயர்த்தல் பற்றி கூறிய இயல் எது?**

    **ஆ) சின்னமனூர்ச் செப்பேடு மொழிபெயர்ப்பு பற்றிக் கூறும் செய்தி யாது?**

    **இ) வடமொழிக் கதைகளைத்தழுவி படைக்கப்பட்ட நூல்கள் எது?**

31. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**34 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2 x 3 = 6**

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப் படை எவ்வாறு காட்டுகிறது?

33. மன்னர் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34. **அ) தண்டலை.....**எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

**(அல்லது)**

**ஆ) நவமணி வடக்க யில்போல் ....** எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலை எழுதுக.

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 3 = 6**

35. **'கண்ணே கண்ணுறங்கு !**

**காலையில் நீயெழும்பு !**

**மாமழை பெய்கையிலே!**

**மாம்பூவே கண்ணுறங்கு!**

**பாடினேன் தாலாட்டு !**

**ஆடி ஆடி ஓய்ந்துறங்கு !'** - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

GREEN GARDEN MATRIC HR. SEC. SCHOOL, PERUNDURAI.

36. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

37. **"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**

**பேணி தமராக் கொளல்"**- அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5 x 5 = 25**

38. **அ)** மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப்பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரைநகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே - கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.

**(அல்லது)**

**ஆ)** பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

39. **அ)** உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41. திரு. காந்தி என்பவர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராவதற்குப் படிவம் நிரப்புகிறார். கீழ்க்கண்ட அவரின் விவரங்களின்படித் தேர்வர் தம்மைக் காந்தியாகப் பாவித்து உரிய படிவத்தை நிரப்புக.

இல்ல முகவரி: 25, அண்ணா நகர், கோவை.

படித்த பள்ளி: அரசு மேல்நிலைப்பள்ளி, கோவை.

GREEN PARK MATRIC.HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

42. **அ)** தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி:

திறன் பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை:

காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்:

எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி

இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க.**

The golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**பகுதி - V**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளி.** 3 x 8 = 24

43. **அ)** முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக

44. **அ)** அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

**ஆ)** விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் கட்டுரை எழுதுக.

45. **அ)** நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன. இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் ‘மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்’ என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ஆ | இ | இ | அ | அ | இ | இ |
| **9.** | **10.** | **11.** | **12.** | **13.** | **14.** | **15.** | |
| ஆ | ஆ | ஈ | ஆ | இ | ஈ | ஆ | |

❀ ✿ ❀

GREEN GARDEN MATRIC HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

*Reg. No.* | | | | | | |

# கிரீன் கார்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பெருந்துறை R.S

## மாதிரி வினாத்தாள்- III

வகுப்பு : X மதிப்பெண்கள் : 100

## தமிழ்

நேரம் : 3.00 மணி

**குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.**

**பகுதி - I**

**பிரிவு - I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :** 15 x 1 = 15

1. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

2. **"சிவப்புச்சட்டை பேசினார்" -** எவ்வகை தொகைச்சொல்?

அ) உவமைத்தொகை ஆ) அன்மொழித்தொகை இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

3. வெற்றிவேற்கை என அழைக்கப்படும்________சிறந்த அறக்கருத்துகளை எடுத்துரைக்கிறது.

அ) குறுந்தொகை ஆ) நறுந்தொகை இ) கலித்தொகை ஈ) நற்றிணை

4. மலைபடுகடாம் என்பது எத்தனை அடிகளைக் கொண்ட நூல்?

அ) 385 ஆ) 583 இ) 853 ஈ) 308

5. பேணி என்ற சொல்லின் பொருள் என்ன?

அ) உறவு ஆ) அன்பு இ) கடமை ஈ) போற்றி

6. மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

7. திணைகளுக்குரிய தெய்வத்தைப் பொருத்திக் காட்டுக.

| | | |
|---|---|---|
| அ) குறிஞ்சி | - | **1**. கொற்றவை |
| ஆ) முல்லை | - | **2**. வருணன் |
| இ) மருதம் | - | **3**. இந்திரன் |
| ஈ) நெய்தல் | - | **4**. திருமால் |
| உ) பாலை | - | **5**. முருகன் |

அ) 4, 3, 2, 3, 1 ஆ) 5, 4, 3, 2, 1 இ) 3, 2, 4, 5, 1 ஈ) 1, 2, 3, 4, 5

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

9. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்.

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

10. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று_____________வேண்டினார்.

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

11. 'தீவகம்' என்ற சொல்லின் பொருள் என்ன?

அ) தீயவை ஆ) விளக்கு இ) தேவதை ஈ) நல்லசை

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு(12,13,14,15) விடைதருக.**

**"செந்தமிழே ! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை**
**எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?**
**முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்**
**விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்"**

12. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்__________

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

13. செந்தமிழ் என்பது__________

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

15. வேறார் புகழுரையும் - இச்தொடரில்'வேறார்'என்பது__________

அ) தமிழர் ஆ) சான்றோர் இ) புலவர் ஈ) வேற்றுமொழியினர்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**<u>21</u> வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **4 x 2 = 8**

16. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

17. **விடைக்கேற்ற வினா அமைக்க.**

அ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.

ஆ) தமிழ்த்தென்றல் திரு. வி. க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் இரா. இளங்குமரனார்.

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

18. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

19. **“கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன்**
**பால் பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்”**

- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

20. குறிப்பு வரைக – அவையம்.

21. **‘கண்’** என முடியும் குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **5 x 2 = 10**

22. **பழமொழிகளை நிறைவு செய்க.**

**அ)** உப்பில்லாப் _______________ **ஆ)** அளவுக்கு_____________

23. **அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது.

**(வழுவை வழாநிலையாக மாற்றுக)**

24. **கிளர்ந்த –** பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. **கலைச்சொல் தருக.**

**அ)** Epic literature **ஆ)** Philospher

26. மரபுத்தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

**அ)** மனக்கோட்டை **ஆ)** கண்ணும் கருத்தும்.

27. **தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

**அ)** கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

**(கலவைச் சொற்றொடராக மாற்றுக)**

**ஆ)** ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.**( தனிச்சொற்றொடர்களாக மாற்றுக)**

28. **பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.**

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**பகுதி - III**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 3 = 6**

29. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் மற்றும் எழுதிய நூல்கள் சிலவற்றை எழுதுக.

30. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வாறு எடுத்துரைப்பீர்கள்?

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL, PERUNDURAI R.S.

31. தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

**அ) போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?**

**ஆ) ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்துக் குறிப்பிடுவது யாது?**

**இ) போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?**

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

**34 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்** **2 x 3 = 6**

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34. அ) **தூசும் துகிரும்**....எனத் தொடங்கும் **"சிலப்பதிகாரப்"** பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) **சிறுதாம்பு தொடுத்த**.... எனத் தொடங்கும் **"முல்லைப்பாட்டுப் "** பாடலை எழுதுக.

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 3 = 6**

35. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத்தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், ''இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப்பார்'' என்றார்.'' இதோ சென்று விட்டேன்'' என்றவாறே அங்குச் சென்றேன் துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, ''என்னடா விளையாட வேண்டுமா?'' என்று கேட்டு அவனை அவிழ்த்து விட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், ''நீயும் இவனும் விளையாடுங்கள்'' என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

36. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

37. **கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**

**அருவினையும் மாண்ட தமைச்சு.** - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

**பகுதி - IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5 x 5 = 25**

38. **அ)** மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**

**ஆ)** சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL,PERUNDURAI R.S.

39. **அ)** பள்ளிக்கு வரும் வழியில் கிடைத்த பணப்பையை உரியவரிடத்தில் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உனது சித்தாப்பாவிற்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** உனது தங்கைக்கு திறன்பேசி பயன்பாட்டினால் ஏற்படும் நன்மை தீமைகளைக் குறிப்பிட்டு அறிவுரைக் கடிதம் ஒன்று எழுதுக.

40. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி கிராமம் கதவு எண்.125/2இல் வசித்து வரும் இளங்கோவன் மகன் மகிழன் நங்கவள்ளியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் கீழ்க்கண்டவாறு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார். தமிழ் - 96, ஆங்கிலம் - 92, கணிதம் - 99, அறிவியல் - 97, சமூக அறிவியல் - 95 மேலும் இவர் மேட்டூரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் கணினி அறிவியல் பிரிவில் சேர உள்ளார். உரிய சேர்க்கைப் படிவத்தினை நிரப்புக.

42. **அ)** மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பற்றி எழுதுக.

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க**.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

**பகுதி - V**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளி.** **3 x 8 = 24**

43. **அ)** தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** "சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்" என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே அறிஞர் பெருமக்களே வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி . . . தண்டலை மயில்கள் ஆட . . . இவ்வுரையைத் தொடர்க.

GREEN GARDEN MATRIC.HR.SEC.SCHOOL PERUNDURAI R.S.

44. **அ)** அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

45. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.**

**அ)** தமிழின் இலக்கிய வளம் **-** கல்வி மொழி **-** பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் பிற துறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் 'மொழிபெயர்ப்புக்கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

**ஆ).** சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு – சாலை விதிகள் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

❀ ✿ ❀

| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. |
|---|---|---|---|---|---|---|---|
| ஈ | ஆ | ஆ | ஆ | ஈ | அ | ஆ | ஈ |
| **9.** | **10.** | **11.** | **12.** | **13.** | **14.** | **15.** | |
| அ | அ | ஆ | இ | அ | ஆ | ஈ | |

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL, PERUNDURAI. KS.